# 19. சூகப்பிரமம்

அண்டபகி ரண்டங்க ளைத்தம் வயப்பட
வடக்கியெதி ராளியிலராய்
அரிபோல நெடுநா ளிருந்தரசு செய்தபே
ரரசர்பெரு வாழ்வுமமுதம்
உண்டதே வர்க்குரிய கோனாய் விளங்கொருவ
னுத்தியு நிலைப்புறாமல்
ஒழிந்தவிவ ரத்தைப் புராதன புராணங்க
ளோதுண்மை கண்டிருந்துந்
தண்டிகைக ளும்பல்க ளுகைத்துவெகு ஜம்பமொடு
தரணியி லிருந்தவர்களுந்
தலம்விட் டலங்கோல மாயதை யறிந்துஞ்
சதாமாசை யாசைதனிலே

---

1. **உம்பல்** = யானை. **ஜம்பம்** = இடம்பம்.

"**உத்தி**" இதன் பொருள் – 16, 10–ன் குறிப்பிரையி லுளது.

**மண்டிமன மடிகின்ற மாயமென் சொல்லுவேன்**
**மனமாசு போழுமெந்தாய்**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

அண்ட பகிர் அண்டங்களைத் தம் வயப்பட
அடக்கி எதிராளி இலராய்
அரிபோல நெடுநாள் இருந்து அரசு செய்தபேர்
அரசர் பெருவாழ்வும் அமுதம்
உண்ட தேவர்க்கு உரிய கோனாய் விளங்கு ஒருவன்
உத்தியும் நிலைப்புறாமல்
ஒழிந்த விவரத்தைப் புராதன புராணங்கள்
ஓது உண்மை கண்டிருந்தும்
தண்டிகைகள் உம்பல்கள் உகைத்து வெகு ஐம்பமொடு
தரணியில் இருந்தவர்களும்
தலம் விட்டு அலங்கோலமாயதை அறிந்தும்
சதாமாசை ஆசைதனிலே
மண்டி மனம் மடிகின்ற மாயம் என் சொல்லுவேன்
மனமாசு போழும் எந்தாய்
மதி வளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதயத் தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! அண்டங்களையும் புற அண்டங்களையும் தன் வயத்திலிருக்கும்படியாக அடக்கிப் பகைவர் எவரும் இல்லாதவராய்ச் சிங்கம்போல் நெடுநாள் இருந்து அரசாட்சி புரிந்த பேரரசர்களுடைய பெரிய வாழ்க்கையும், அமுதம் உண்ட தேவர்களுக்கு அரசனாய் விளங்கும் இந்திரன் செல்வமும், நிலைப்புறாமல் அழிந்து போன விவரங்களைப் பழைமையான புராணங்கள் கூறுகின்ற உண்மையை அறிந்திருந்தும், பல்லக்குகள், யானைகள் செலுத்தி வெகு ஆடம்பரத்துடன் இவ்வுலகில் வாழ்ந்திருந்தவர்களும், தம் நகரைவிட்டுப் பிற இடம் சென்று அலங்கோலம் அடைந்துள்ளதை அறிந்திருந்தும், என் மனக்குற்றத்தைப் பிளக்கும் எமது தந்தையே, எப்போதும் பொன்னாசையில் மூழ்கி மனம் மடிகின்ற மாயத்தை என்னவென்று சொல்லுவேன்? 1

**உன்னருள் பெறாமலிவ் வுலகினி லிருக்கும்வரை**
**யொழியுமோ தீயசெய்கை**
**ஒழிவதின் றொழிவதின் றுடுபதிக் கலைபோல**
**வொன்றினுக் கொன்றுமேலாய்**
**மன்னியே நாளுக்கு நாளாய் வளர்ந்தாதன்**
**மறலிகை யாயபின்னும்**
**வரும்பிறவி தோறுமதி புன்கணே தந்துநனி**
**வாதிக்க வல்லதன்றோ**
**அன்னைகுரு தெய்வமா யுள்ளமுதல் வாவிந்த**
**வவதிக்கு ளெனைவிடாதிவ்**
**வம்புவியு மாசினியு முன்றாச னென்னவோ**
**ரபிதான மேதையீதி**
**மன்னுயி ரனைத்தையு மணைத்தா தரிக்குமொரு**
**வள்ளலே நல்லவுறவே**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

உன் அருள் பெறாமல் இவ்வுலகினில் இருக்கும் வரை
ஒழியுமோ தீய செய்கை
ஒழிவதின்று ஒழிவதின்று உடுபதிக் கலைபோல
ஒன்றினுக்கு ஒன்று மேலாய்
மன்னியே நாளுக்கு நாளாய் வளர்ந்து ஆதன்
மறலிகை ஆய பின்னும்
வரும் பிறவிதோறும் அதி புன்கணே தந்துநனி
வாதிக்க வல்லதன்றோ
அன்னை குரு தெய்வமாய் உள்ள முதல்வா இந்த
அவதிக்குள் எனை விடாது இவ்
அம்புவியும் ஆசினியும் முன் தாசன் என்ன ஓர்
அபிதான மேதை ஈதி
மன்னுயிர் அனைத்தையும் அணைத்து ஆதரிக்கும் ஒரு
வள்ளலே நல்ல உறவே
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

நிலைபெற்ற உயிர்கள் அனைத்தையும் அணைத்து ஆதரிக்கும் ஒப்பற்ற வள்ளலே! சிறந்த உறவானவனே! அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற

குகப்பிரமமே! உனது திருவருளைப் பெறாமல் இவ்வுலகில் இருக்கும் வரையிலும் தீவினைகள் ஒழியுமோ? ஒழிவதில்லை! சந்திரனின் கலைகள் போன்று ஒன்றினுக்கு ஒன்று மேலானதாய் நிலைபெற்று நாளுக்கு நாள் வளர்ந்து உயிரானது இயமன் கைவசப்பட்ட பின்பும், பின்வருகின்ற பிறவிகள்தோறும் அதிக துன்பத்தைத் தந்து நன்கு வருத்த வல்லதல்லவோ? தாயாகவும், குருவாகவும், தெய்வமாகவும் உள்ள முதல்வனே! இத்துன்பத்துள் என்னை விடாது இந்த மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் முன்னே அடிமை என்கின்ற ஒப்பற்ற பெயரான மேன்மையை ஈந்தருள்வாயாக! 2

**உள்ளன் புளார்மிக்க வசைபேசி யேசிடினு**
**முன்செவிக் கின்பமேயவ்**
**வுள்ளன் பிலாரமித துதிகளைச் சொல்லினு**
**முனக்கரு வருப்பாதறொட்**
**டெள்ளளவு முள்ளன்பி லாதவென் றுதியுனக்**
**கேறுமோ விழியுமோவென்**
**றேங்குகிற தேமனந் தேம்புகிற தேதின**
**மிரக்கமுற் றென்றுபிறிதோர்**
**கள்ளமன தைக்களைந் துள்ளன் புறச்செய்து**
**காதலா கக்கலப்பாய்**
**கத்தனே நித்தனே சித்தனே சுத்தனே**
**கதிகருது வோரெவர்க்கும்**
**வள்ளலே மெய்யன்ப ருள்ளமுத வெள்ளமே**
**மங்காத மணிவிளக்கே**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

*உள்அன்புளார் மிக்க வசைபேசி ஏசிடினும்*
*உன் செவிக்கு இன்பமே அவ்*
*உள்அன்பு இலார் அமித துதிகளைச் சொல்லினும்*
*உனக்கு அருவருப்பு ஆதல் தொட்டு*
*எள் அளவும் உள் அன்பு இலாத என் துதி உனக்கு*
*ஏறுமோ இழியுமோ என்று*
*ஏங்குகிறதே மனம் தேம்புகிறதே தினம்*
*இரக்கம் உற்று என்று பிறிது ஓர்*

*கள்ள மனதைக் களைந்து உள்அன்பு உறச்செய்து*
*காதலாகக் கலப்பாய்*
*கத்தனே நித்தனே சித்தனே சுத்தனே*
*கதி கருதுவோர் எவர்க்கும்*
*வள்ளலே மெய்அன்பர் உள் அமுத வெள்ளமே*
*மங்காத மணி விளக்கே*
*மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்*
*மருவு ஒரு குகப்பிரமமே.*

ஐந்தொழில்களையும் செய்யும் கர்த்தனே! நிலையானவனே! அறிவு வடிவானவனே! மலக்குற்றம் இல்லாத தூயவனே! நற்கதியைக் கருதுவோர் எவருக்கும் அதனை அளித்தருளும் வள்ளலே! மெய்யன்பர் அகத்தில் அமுத வெள்ளமாக உள்ளவனே! மங்காத மாணிக்க விளக்கே! அறிவு வளரும் இதயதாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! மனத்தில் மெய்யன்புடையவர் மிகுதியாக இழிமொழியைப் பேசி ஏசினாலும், உன்னுடைய திருச்செவிகளுக்கு அவை இன்பத்தை அளிக்கும். அந்த மெய்யன்பு இல்லாதவர் இனிய துதிகளைச் சொன்னாலும், உனக்கு அருவருப்பு ஆகுதலால், எள் அளவும் மெய்யன்பு இல்லாத என் துதி உனக்குத் திருச்செவியில் படுமோ படாதோ என்று தினமும் மனம் ஏங்குகிறதே! தேம்புகிறதே! இரக்கம் கொண்டு வேறொரு வஞ்சமனத்தை என்று களைந்து உள்ளன்பு கொள்ளச் செய்து அன்பாகக் கலந்தருள்வாய்? 3

**காயா புரித்திமிர கானத்தி னாளுநிமிர்**
**கபடப்புன் மேய்ந்துதினமுங்**
**காமத் தடாகத்து நீர்குடித் துயர்வெருட்**
**கடுவழி திரிந்துலாவித்**
**தேயாது வளர்பஞ்ச வண்ணவசு வத்திற்**
**சிறந்தவை ராக்கியமெனுஞ்**
**சேணநா லங்கவடி யென்பன சுமத்தித்**
**திறம்பியெவ் வாற்றினானுஞ்**
**சாயாது புத்தியங் கடிவாளம் வாயிற்**
**றறிப்பித் திவர்ந்துமௌனச்**
**சவுக்கா லடித்துசித மேலூர் நடைக்கணே**
**சலசலென நானடத்தி**

**மாயாத சிற்சபையி னடுவே குதித்துன்**
**மலர்ப்பதங் காண்பதென்றோ**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

காயாபுரித் திமிர கானத்தில் நாளும் நிமிர்
கபடம்புல் மேய்ந்து தினமும்
காமத் தடாகத்து நீர் குடித்து உயர்வெருள்
கடுவழி திரிந்து உலாவித்
தேயாது வளர் பஞ்சவண்ண அசுவத்தில்
சிறந்த வைராக்கியம் எனும்
சேண நாலுஅங்கவடி என்பன சுமத்தித்
திறம்பி எவ்வாற்றின்ஆனும்
சாயாது புத்தி அம் கடிவாளம் வாயில்
தறிப்பித்து இவர்ந்து மௌனச்
சவுக்கால் அடித்து உசித மேல்ஊர் நடைக்கணே
சலசலஎன நான் நடத்தி
மாயாத சிற்சபையின் நடுவே குதித்து உன்
மலர்ப்பதம் காண்பது என்றோ
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! உடம்பெனும் ஊரிலே இருளான காட்டிலே நாள்தோறும், உயர்ந்த வஞ்சனை என்னும் புற்களை மேய்ந்து, நாள்தோறும் காமம் என்னும் தடாகத்தில் நீரைக் குடித்துப் பெரிய அச்சம் எனும் கடத்தற்கரிய வழியில் திரிந்து உலாவித் தேயாது வளர்கின்ற பஞ்சவண்ணக் குதிரையில், சிறந்த வைராக்கியம் என்னும் சேணம் நான்கு கவணை குதிரை அங்கவடி என்பன சுமத்திப் பிறழ்ந்து, எந்த வழியினாலும் சாயாமல் புத்தி என்னும் அழகிய கடிவாளத்தை வாயிற்பூட்டி ஏறி, மௌனம் எனும் சவுக்கால் அடித்து, நல்ல மேலூர்ப் பாதையிலே சல சல என நான் நடத்தி அழியாத சிற்சபையின் நடுவே குதித்து, உன் மலர் போலும் திருவடிகளைக் காண்பது என்றோ? 4

**ஆசைப் பிசாசென்னு மனதையொரு மந்திரத்**
**தசையாது கட்டிநல்ல**
**அறிவதனை யொட்டியே பதுமா தனத்திடை**
**யமர்ந்துநடு நாடிபற்றி**

**ஏசற்ற வாதார தேவதைக ளத்தனையு**
**மிதவோடு தரிசித்தவண்**
**எந்தாய் பராசக்தி யருள்கொண்டு மூலத்**
**தெழுந்தகுண் டலிசத்திதான்**
**ஓசைதரு மாறுகீழ் மேலாக வுள்ளதுளை**
**யொன்பானு நனியடைத்துள்**
**ஒருவழிப் பட்டரிய கண்டங் கடந்தமுத**
**முண்டுமிளிர் வாயில்வழியாய்**
**வாசமுட னேசென் றகண்டமதை யெய்துசக**
**மார்க்கம தெனக்குமாமோ**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

ஆசைப் பிசாசு என்னும் மனதை ஒரு மந்திரத்து
அசையாது கட்டி நல்ல
அறிவு அதனை ஒட்டியே பதும ஆதனத்துஇடை
அமர்ந்து நடு நாடி பற்றி
ஏசு அற்ற ஆதார தேவதைகள் அத்தனையும்
இதவு ஒடு தரிசித்து அவண்
எந்தாய் பராசத்தி அருள்கொண்டு மூலத்து
எழுந்த குண்டலி சத்திதான்
ஓசை தருமாறு கீழ்மேலாக உள்ள துளை
ஒன்பானும் நனி அடைத்து உள்
ஒருவழிப்பட்டு அரிய கண்டம் கடந்து அமுதம்
உண்டு மிளிர் வாயில் வழியாய்
வாசம் உடனே சென்று அகண்டம் அதை எய்து சக
மார்க்கம் அது எனக்கும் ஆமோ
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! ஆசையாகிய பிசாசு எனப்படும் மனத்தை ஒரு மந்திரத்தால் அசையாது கட்டி, நல்ல அறிவைச் சார்ந்து பத்மாசனத்தில் அமர்ந்து சுழுமுனை நாடியைப் பிடித்துக்கொண்டு, மூலாதாரம் தொடங்கிக் குற்றமற்ற ஆதார தேவதைகளான கணபதி, பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகியோர் அத்தனை பேரையும் அவர்களுடனுறையும்

தேவிகளுடன் இன்புடன் தரிசித்து, அவ்விடம் எம்முடைய தாயான பராசத்தியின் அருளைக் கொண்டு, மூலாதாரத்தில் எழுந்த குண்டலினிசத்தி ஓசை தரும்படிக் கீழிலிருந்து மேலே வரையிலும் உள்ள கருவாய், எருவாய், வாய், செவிகள், நாசித்துவாரங்கள், கண்கள் ஆகிய ஒன்பது துவாரங்களையும் அடைத்து, உள்ளே ஒரு வழிப்பட்டு அரிய எல்லைகளைக் கடந்து, தலை உச்சியில் சகஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர, சந்திர மண்டலத்தைத் தாக்கிப் பிரமரந்திரம் என்னும் துளைவழியே அமுதம் பொழிய அதனை உண்டு, ஒளிவீசும் பிரமரந்திரம் என்னும் வாயில் வழியாக மணமுடன் மேலே சென்று, எல்லையற்ற பரம்பொருளை அடைதல் சகமார்க்கம் எனும் யோக நெறியாகும். அஃது எனக்கும் கைகூடுமோ? 5

**இரவிலுட லயர்வுபடு நித்திரையி லுறுகன**
**வெவற்றிலு முனைப்புகழ்வதொன்**
**றில்லாத வெவ்வளவு விபரீத வேடிக்கை**
**யேற்றியென் னிருதயத்திற்**
**பரவவினை புரிகின்ற மனதைநா னேசவோ**
**பாழ்த்தவம் மனதையங்ஙன்**
**பண்ணினவ ரார்கொலென் றூகிக்கி னீயெனப்**
**பகரவிட னுண்டாமதைக்**
**கருதியுன் மீதுகுறை கூறவோ வெங்கணுங்**
**கருதருஞ் செயலெவைக்கும்**
**காரணமு மாயதற் கப்புற மெனச்சொலொரு**
**காரணமு மாகநிற்கும்**
**வரைவிலா வுன்னையுங் குறைகூற வெப்படியென்**
**மனதினிது சம்மதிக்கும்**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

இரவில் உடல் அயர்வுபடு நித்திரையில் உறு கனவு
எவற்றிலும் உனைப் புகழ்வது ஒன்று
இல்லாத எவ்வளவு விபரீத வேடிக்கை
ஏற்றி என் இருதயத்தில்
பரவவினைபுரிகின்ற மனதை நான் ஏசவோ
பாழ்த்த அம்மனதை அங்ஙன்
பண்ணினவர் ஆர்கொல் என்று ஊகிக்கின் நீ எனப்
பகரஇடன் உண்டாம் அதைக்

கருதி உன் மீது குறை கூறவோ எங்கணும்
கருதஅரும் செயல் எவைக்கும்
காரணமுமாய் அதற்குஅப்புறம் எனச் சொல் ஒரு
காரணமுமாக நிற்கும்
வரைவுஇலா உன்னையும் குறை கூற எப்படி என்
மனது இனிது சம்மதிக்கும்
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்று
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! இரவில் உடம்பு சோர்வடைந்து ஆழ்ந்த உறக்கத்தில் தோன்றும் கனவுகள் எவற்றிலும், உன்னைப் புகழ்வது ஒன்றும் இல்லாத எத்தனை விபரீதமான வேடிக்கையைத் தந்து, இருதயத்தில் பரவும்படியான செயல்களைச் செய்கின்ற மனத்தை செய்தவர் யார்? என எண்ணிப் பார்த்தால், நீதான் எனக் கூறுவதற்கு இடம் உண்டாகும். அதைக் கருதி உன்னைக் குறை கூறவோ? எங்கும் நினைத்தற்கரிய செயல் எவைக்கும் காரணமுமாய், அதற்கு அப்புறம் எனக் கடந்து நிற்பது எனச் சொல்லப்படும் மூலகாரணமாய் நிற்கும் எல்லையில்லா உன்னையும் குறை கூற எப்படி என் மனது இனிது சம்மதிக்கும்? 6

**அகிலமிசை வதிதருஞ் சருவவுயிர் களுமிந்த**
**வவனிதனின் முன்பினாக**
**ஆசைமலி விற்றேடி யுளவினை யிரண்டினையு**
**மனுபவித் துத்தீருதல்**
**இகமறுமை களிலுமுண் டெனமறை யுரைத்தபடி**
**யாம்பாவ மீட்டினமையால்**
**இன்னா வெனுங்கருங் கடலிலே வீழ்ந்தன**
**மெனக்கருத வெனினுநாளும்**
**புகழ்ந்துனை நினைந்திட்ட புண்ணிய மெனுந்தோணி**
**பொள்ளென வெடுக்கவுளதாற்**
**புரையற்ற கரைசேர லாமென்ற நிச்சயம்**
**பொய்யா துதிப்பதன்றி**
**மகிமையருண் முன்வினைக ளிலையென்ற தீர்வையென்**
**மனதைவிட் டகலவிலையே**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

அகிலம் மிசை வதிதரும் சருவ உயிர்களும் இந்த
அவனிதனின் முன்பின் ஆக
ஆசைமலிவில் தேடி உள வினை இரண்டினையும்
அனுபவித்துத் தீருதல்
இக மறுமைகளிலும் உண்டு என மறை உரைத்தபடி
ஆம் பாவம் ஈட்டினமையால்
இன்னா எனும் கருங்கடலிலே வீழ்ந்தனம்
எனக்கருத எனினும் நாளும்
புகழ்ந்து உனை நினைந்திட்ட புண்ணியம் எனும் தோணி
பொள்ளென எடுக்க உளதால்
புரையற்ற கரைசேரலாம் என்ற நிச்சயம்
பொய்யாது உதிப்பது அன்றி
மகிமை அருள் முன்வினைகள் இலை என்ற தீர்வை என்
மனதைவிட்டு அகலவில்லையே
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! அகில உலகின்மீது வாழுகின்ற எல்லா உயிர்களும், இந்த உலகில் முன்பின்னாக ஆசை மிகுதியினால் தேடியுள்ள நல்வினை தீவினை எனும் இரு வினைகளையும் அனுபவித்துத் தீர வேண்டியது, இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் உண்டு என வேதம் உரைத்தபடி ஆகும் பாவங்களைத் தேடிக்கொண்டமையால், துன்பம் என்னும் கருங்கடலில் வீழ்ந்துவிட்டோம் என எண்ணவெனினும், நாள்தோறும் புகழ்ந்து உன்னை நினைந்திட்ட புண்ணியம் எனும் தோணி விரைந்து எடுக்க இருப்பதால், குற்றமற்ற கரை சேரலாம் என்ற உறுதி பொய்யாது தோன்றுவதன்றி, மகிமை அருள்கின்ற பழவினைகள் இல்லை என்ற முடிவு என் மனத்தைவிட்டு அகலவில்லையே! 7

**சிங்கார மாருன்ன தக்கோபு ரத்தினது**
**சிகரத்தி லடைதுகளையுந்**
**திடமுடை நெடுங்கடவை யேறிநூ றிப்புதுமை**
**திகழவே செய்யலாமொண்**
**சங்கூரு மாழ்வாவி வதியைமா னவர்செய்**
**சமர்த்தினால் வெளியேற்றலாம்**
**தலைதனை யளாவியொரு மிதமில்குப் பைக்குவடு**
**தரையினின் றிடினுமதனைச்**

**சங்கார மாக்கவெரி மூட்டலா மென்பெசந்**
**தசைகளா லேசமைந்த**
**சரீரத்தி லுளவழுக் கத்தனையும் வெப்புறு**
**சலம்பெய்து கழுவியிடலாம்**
**மங்காத வாபாச மனமாசை நீக்கவொரு**
**வழியில்லை யுனையன்றியே**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

*சிங்காரம் ஆர் உன்னதக் கோபுரத்தினது*
*சிகரத்தில் அடை துகளையும்*
*திடம் உடை நெடுங்கடவை ஏறி நூறிப்புதுமை*
*திகழவே செய்யலாம் ஒண்*
*சங்கு ஊரும் ஆழ் வாவி வதியை மானவர்செய்*
*சமர்த்தினால் வெளியேற்றலாம்*
*தலைதனை அளாவி ஒரு மிதம்இல் குப்பைக்குவடு*
*தரையில் நின்றிடினும் அதனைச்*
15 *சங்காரம் ஆக்க எரிமூட்டலாம் என்பு எசம்*
*தசைகளாலே சமைந்த*
*சரீரத்தில் உள அழுக்கு அத்தனையும் வெப்புஉறு*
*சலம் செய்து கழுவிஇடலாம்*
*மங்காத ஆபாச மனம்ஆசை நீக்க ஒரு*
*வழி இல்லை உனை அன்றியே*
*மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்*
*மருவு ஒரு குகப்பிரமமே.*

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! அழகு நிறைந்த மேலான கோபுரத்தினது உச்சியில் அடைந்துள்ள தூசிகளையும், உறுதியான நீண்ட ஏணி வைத்து ஏறி அவற்றை அழித்துப் புதுப்பொலிவு விளங்கும்படிச் செய்யலாம்; ஒளி பொருந்திய சங்குகள் ஊர்ந்து திரியும் மிக ஆழமான நீர்நிலையினுள் அடியிலே படிந்துள்ள சேற்றையும், வீரர்கள் செய்யும் சாமர்த்தியத்தினால் வெளியேற்றித் தூய்மைப்படுத்தலாம்; தலையை அளாவி வளர்ந்து கிடக்கும் ஒருமிதம் இல்லாத குப்பை மலை தரையில் நின்றாலும், அதனை அழித்துவிடுவதற்கு நெருப்பை மூட்டலாம்; எலும்பு, நரம்பு, தசைகள் ஆகியவற்றால் ஆன உடம்பிலுள்ள அழுக்குகள் எல்லாவற்றையும்

**8 . எசம்** = சிறுநரம்பு; “ஸ்நஸா” எனும் வடமொழி விகாரமாம்.

வெம்மையான நீரைத் தயாரித்துக் கழுவி விடலாம். குறையாத ஆபாச மனக் குற்றத்தை ஒழிக்க உன்னை அன்றி ஒரு வழி இல்லையே! 8

**பொறையென்னு நற்பசும் பயிர்கருக் கிடுமனற்**
**பூடென்னு நோனாமையைப்**
**பொருந்தாத பெரியோர் சரண்பேணு மாதரம்**
**புந்தியிற் கொண்டவெற்குக்**
**குறைவிறுதி யெத்துணையு மில்பெரிய வின்பவருள்**
**கூர்ந்துமெய் யறிவினின்று**
**குருமொழி யுணர்த்தியசி பதகதியு நல்குமொரு**
**குருதெய்வ மதுவேயெனா**
**மறைமுறை யிசைத்தவண முதல்வழி கொடுத்துநடு**
**வழியினீ யென்னைவிட்டு**
**மறைகின்ற காரண மியாதோ வறிந்திலேன்**
**மயலற விளக்கியருளாய்**
**மறையவனு மிறையவனு மரியமரை யிதலையனு**
**மனதிடை யவாவின்பமே**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

பொறை என்னும் நல்பசும் பயிர் கருக்கிடும் அனல்
பூடு என்னும் நோனாமையைப்
பொருந்தாத பெரியோர் சரண்பேணும் ஆதரம்
புந்தியில் கொண்ட எற்குக்
குறைவு இறுதி எத்துணையும் இல் பெரிய இன்ப அருள்
கூர்ந்து மெய்யறிவின்நின்று
குருமொழி உணர்த்தி அசிபத கதியும் நல்கும் ஒரு
குருதெய்வம் அதுவே எனா
மறை முறை இசைத்த வணம் முதல்வழி கொடுத்து நடு
வழியில் நீ என்னை விட்டு
மறைகின்ற காரணம் யாதோ அறிந்திலேன்
மயல் அற விளக்கி அருளாய்
மறையவனும் இறையவனும் அரிய மரை இதலையனும்
மனதுஇடை அவாவு இன்பமே
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

9. **நோனாமை** = பொறாமை. **ஆதரம்** - ஆசை.

வேதமுதல்வனும், பிரமனும், அரிய தாமரைக் கொப்பூழ் உடைய திருமாலும் மனத்திடை விரும்பும் இன்பமே! அறிவு வளரும் இருதய தாமரை மலரின் ஒளியாய் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! பொறுமை என்னும் நல்ல பசும்பயிரைக் கருக்கிடும் நெருப்புப் பூண்டு என்னும் பொறாமை இல்லாமையைப் பொருந்தாத பெரியோர் திருவடிகளைப் போற்றும் அன்பினை மனத்திலே கொண்ட எனக்குக் குறைவும் மரணமும் எந்த அளவும் இல்லாத பெரிய இன்ப அருள் புரிந்து, மெய்யறிவில் நின்று, உபதேச மொழியை அறிவித்து, 'தத்துவமஸி' எனும் மகாவாக்கியத்தின்படிச் சீவன் சிவனாதல் எனும் பரகதியையும் அளித்தருளும் ஒப்பற்ற குருவான தெய்வம் அதுவே என்று வேதங்கள் முன்பு கூறியவண்ணம், முதலில் வழி கொடுத்துப் பின் நடுவழியில் என்னை நீ கைவிட்டு மறைகின்ற காரணம்தான் எதுவோ அறிந்திலேன்; மன மயக்கம் நீங்க அதனை விளக்கி அருளாய்! 9

**பொய்வாழ்வு வையகம் பொய்யென் றடங்கவென்**
**புரைமன தடங்கிநிட்டை**
**புரியவொரு காலத்து நனிகண்டி லேனெனது**
**புதையிடை யிருந்துநிமிரும்**
**மெய்வாய் கணாதியிந் திரியங்க ளெல்லாம்**
**விரும்பியென் சம்மதத்தை**
**மேவியோ தூங்குகின் றனவிவை யனைத்துக்கு**
**மேலாய துட்டமனது**
**செய்கைவிட் டுள்ளடங் கித்துரிய நித்திரை**
**செயுங்கொலோ செய்திடற்குச்**
**செய்யுமொரு தந்திரஞ் செய்யவென் றாலுநான்**
**செய்யும்வகை யேதுமறியேன்**
**மையல்கொண் டருணகிரி வந்தித்த கடவுளே**
**மயறபுத் தென்னையாளாய்**
**மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று**
**மருவொரு குகப்பிரமமே.**

*பொய் வாழ்வு வையகம் பொய் என்று அடங்க என்*
*புரை மனது அடங்கி நிட்டை*
*புரிய ஒரு காலத்து நனி கண்டிலேன் எனது*
*புதையிடை இருந்து நிமிரும்*

மெய் வாய் கண் ஆதி இந்திரியங்கள் எல்லாம்
விரும்பி என் சம்மதத்தை
மேவியோ தூங்குகின்றன இவை அனைத்துக்கும்
மேலாய துட்ட மனது
செய்கைவிட்டு உள் அடங்கித் துரிய நித்திரை
செயுங்கொலோ செய்திடற்குச்
செய்யும் ஒரு தந்திரம் செய்ய என்றாலும் நான்
செய்யும் வகை ஏதும் அறியேன்
மையல் கொண்டு அருணகிரி வந்தித்த கடவுளே
மயல் தபுத்து என்னை ஆளாய்
மதிவளரும் இதயமரை மலரில் ஒளியாய் என்றும்
மருவு ஒரு குகப்பிரமமே.

அறிவு வளரும் இதய தாமரை மலரில் ஒளியாய் என்றும் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற குகப்பிரமமே! பொய்யான வாழ்வாகிய உலகம் பொய் என்று அடங்கவும், என் குற்றமான மனம் அடங்கி நிட்டை புரிய ஒரு காலத்தும் நன்கு காணவில்லை; எனது உடம்பிடை இருந்து ஓங்கும் மெய், வாய், கண் முதலிய பொறிகள் எல்லாம் விரும்பி என் சம்மதத்தைச் சார்ந்தோ தூங்குகின்றன? இவை அனைத்துக்கும் மேலாகக் கெட்ட மனது, செய்கையை விட்டு உள்ளே அடங்கித் தூக்கத்தைச் செய்யுமோ? செய்வதற்குச் செய்யும் வகை அறியேன்! மெய்யன்பு பூண்டு அருணகிரிநாதர் துதித்த கடவுளே! என் மயக்கத்தைப் போக்கி என்னை அடிமை கொண்டருள்வாயாக! 10